**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆடித்திங்கள் 19 ம் நாள்

**இ.ம.எண். 9/2025**

**in**

**அ.வ.எண். 201/2011**

கே.ஆர்.சாமியப்பன் ... மனுதாரர்/18 ம் பிரதிவாதி

/எதிர்/

1. பொன்னுசாமி
2. குழந்தசாமி ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. S.P.சாமியப்பன்
4. S.P.ராமசாமி
5. S.P.சின்னசாமி (இறந்துவிட்டார்)
6. T.யுவராஜ்
7. C.துரைசாமி
8. M.கோவிந்தசாமி
9. M.குழந்தசாமி
10. C.தங்கராஜ்
11. L.சந்திரசேகர்
12. P.நல்லப்ப கவுண்டர்
13. P.ராமசாமி
14. S.விஸ்வநாதன்
15. S.தங்கராஜ்
16. K.சாமியப்ப கவுண்டர் (இறந்துவிட்டார்)
17. A.கோவிந்தசாமி கவுண்டர் (இறந்துவிட்டார்)
18. செல்லகுமாரசாமி
19. K.மீனாட்சி
20. K.R.சாமியப்பன்
21. V.சச்சிதானந்தம்

22. பொன்னுசாமி (இறந்துவிட்டார்)
23. உலகநாதன்
24. சாமியாத்தாள்
25. சரஸ்வதி
26. பத்மா
27. குருசாமி
28. பொன்னுசாமி சார்பில் பவர் ஏஜெண்ட் லோகநாதன்
29. A.சண்முகசுந்தரம்
30. A.செந்தில்குமார்
31. மங்கையற்கரசி
32. K.சாந்தி
33. R.சதீஸ்குமார்
34. R.அசோக்குமார்
35. L.செந்தில்குமார்
36. தங்கம்மாள்
37. மயிலாத்தாள்
38. சுரேஷ்
39. ராஜேஷ்
40. சரஸ்வதி
41. மனோகரன்
42. யுவராணி
43. சக்திசரவணகுமார் .... எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 17, 19 முதல் 41 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 28.07.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பூபதி, B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 9 மற்றும் 33 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அங்குராஜ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 26ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.பிரபாகரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 8, 10 முதல் 13, 16 முதல் 19, 21 முதல் 25,

27 முதல் 32, 34 முதல் 43 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>உத்தரவு</u>

மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் டிடபிள்யூ.3 குறுக்கு விசாரணை சாட்சியங்களை பதிவு செய்து அது குறித்த ஒரு அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 1ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:–**

i) இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 18ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர் மற்றும் மற்ற எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாவா செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் மனுதாரர் பிரதிவாதிகள் தரப்பு பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு மனுதாரர் 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. இதர பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு வந்த நிலையில் 3, 14, 15, 20 பிரதிவாதிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு வாரிசுகள் சேர்க்கும் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதன் காரணமாக மனுதாரரை 8ம் பிரதிவாதியை தவிர இதர தரப்பினர்கள் குறுக்கு விசாரணை செய்து முடிக்கவில்லை.

ii) இந்நிலையில் மனுதாரருக்கு பக்கவாதம் ஏற்பட்டு ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், நத்தக்காடையூரில் பரிசோதனை செய்து கொண்டும் இருந்து வருகிறார். மனுதாரருக்கு ஏற்பட்ட பக்கவாதம் காரணமாக சரியாக நடக்க முடியாத நிலையில் உள்ளார். அடிக்கடி தலை சுற்றலும் வருவதால் வெளியிடங்களுக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு மருத்துவரின் ஆலோசனை படி சிகிச்சை பெற்று வருகிறார். எனவே மனுதாரரால் நீதிமன்றத்திற்கு குறுக்கு விசாரணைக்காக ஆஜராக இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறார். மனுதாரர் தனது வீட்டிலிருந்தபடியே சாட்சியம் அளிக்க தயாராக உள்ளார்.

iii) மனுதாரரின் உடல்நிலையை கருதி நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து இருதரப்பு முன்னிலையில் மனுதாரரின் வாக்குமூலத்தை அவரது வீட்டில் வைத்து பதிவு செய்து அதன் அறிக்கையை நீதிமன்ற ஆணையர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். மேலும் மனுதாரரின் வழக்கு வாதத்தை நிரூபிக்க முடியாமல் போய்விடும். எனவே அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் டிடபிள்யூ.3 குறுக்கு விசாரணை சாட்சியங்களை பதிவு செய்து அது குறித்த ஒரு அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) 9ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 26 மற்றும் 33 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் 1, 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணையும் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் 18ம் பிரதிவாதியான மனுதாரரை முதல் விசாரணை 14.11.2018 ல் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா இருந்த சமயம் மனுதாரர் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் வாய்தா பெற்று வந்து வழக்கினை காலம் தாழ்த்தி வருகிறார். தற்போது குறுக்கு விசாரணைக்கு இறுதியாக போடப்பட்டிருந்த சமயம் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கண்டு இம்மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல.

iii) மனுதாரருக்கு பக்கவாதம் ஏற்பட்டுவிட்டதாகவும் அதனால் ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் நத்தக்காடையூர் மருத்துவமனையில் பரிசோனை செய்துக்கொண்டு வீட்டில் இருந்து வருவதாக சொல்வது ஆதாரமற்றது. மனுதாரரால் சரியாக நடக்க முடியாமல் உள்ளதாகவும் அடிக்கடி தலை சுத்தல் வருவதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளது உண்மையல்ல. பொய்யான மனுவுடன் தாக்கல் செய்துள்ள மருத்துவ சான்று உன்மையானதல்ல. மனுதாரர் நீதிமன்ற நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவர். அதனால் நீதிமன்ற ஆணையர் மூலம் குறுக்கு விசாரணை செய்ய

சரியான ஒத்துழைப்புக் கொடுக்கமாட்டார். அதனால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர் மூலம் மனுதாரரை விசாரிக்க கூறுவது ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர் வசதி வாய்ப்புள்ள நபர். அதனால் நீதிமன்றத்தில் ஆஜராகி அமர்ந்து சாட்சியம் சொல்ல இயலும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிருரை சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் 9 மற்றும் 26 எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:-</u>**

மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் மனுதாரருக்கு பக்கவாதம் ஏற்பட்டு ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், நத்தக்காடையூரில் பரிசோதனை செய்து கொண்டும் இருந்து வருகிறார் என்றும் மனுதாரருக்கு ஏற்பட்ட பக்கவாதம் காரணமாக சரியாக நடக்க முடியாத நிலையில் உள்ளார் என்றும் அடிக்கடி தலை சுற்றலும் வருவதால் வெளியிடங்களுக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு மருத்துவரின் ஆலோசனை படி சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் எனவே மனுதாரரால் நீதிமன்றத்திற்கு குறுக்கு

விசாரணைக்காக ஆஜராக இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறார் என்றும் மனுதாரர் தனது வீட்டிலிருந்தபடியே சாட்சியம் அளிக்க தயாராக உள்ளார் என்றும் எனவே அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் டிடபிள்யூ.3 குறுக்கு விசாரணை சாட்சியங்களை பதிவு செய்து அது குறித்த ஒரு அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

6. 9 மற்றும் 26 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரருக்கு பக்கவாதம் ஏற்பட்டுவிட்டதாகவும் அதனால் மருத்துவமனையில் பரிசோனை செய்துக்கொண்டு வீட்டில் இருந்து வருவதாக சொல்வது ஆதாரமற்றது என்றும் மனுதாரரால் சரியாக நடக்க முடியாமல் உள்ளதாகவும் அடிக்கடி தலை சுத்தல் வருவதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளது உண்மையல்ல என்றும் மனுதாரர் நீதிமன்ற நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவர் என்றும் அதனால் நீதிமன்ற ஆணையர் மூலம் குறுக்கு விசாரணை செய்ய சரியான ஒத்துழைப்புக் கொடுக்கமாட்டார் என்றும் அதனால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் மூலம் மனுதாரரை விசாரிக்க கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது 1, 2 எதிர்மனுதார்கள்/வாதிகளால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் பரிகாரம் கோரி பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு கடந்த 19.12.2011 அன்று 8, 12 மற்றும் 13 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கடந்த 30.03.2012 அன்று அசல் வழக்கில்

வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு கடந்த 26.08.2013 அன்று பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு கடந்த 24.01.2018 அன்று 26 மற்றும் 30 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கடந்த 14.02.2018 அன்று கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 25.06.2018 அன்று பி.வா.சா.2 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.10 முதல் பி.வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 14.11.2018 அன்று பி.வா.சா.3 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.16 மற்றும் 17 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 03.12.2018 அன்று பி.வா.சா.3 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, அசல் வழக்கானது பி.வா.சா.3ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் கடந்த 07.02.2025 அன்று மனுதாரர்/18ம் பிரதிவாதியின் வாக்குமூலத்தை வீட்டில் வைத்து பதிவு செய்து அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர்/18ம் பிரதிவாதி தரப்பில் மனுதாரருக்கு பக்கவாதம் ஏற்பட்டு ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், நத்தக்காடையூரில் பரிசோதனை செய்து கொண்டும் இருந்து வருகிறார் என்றும் மனுதாரருக்கு ஏற்பட்ட பக்கவாதம் காரணமாக சரியாக நடக்க முடியாத நிலையில் உள்ளார் என்றும் அடிக்கடி தலை சுற்றலும் வருவதால் வெளியிடங்களுக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு மருத்துவரின் ஆலோசனை படி சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் சொல்லப்பட்டுள்ள நிலையில் அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அசல் வழக்கானது

2011ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அசல் வழக்குரையில் மனுதாரர்/18ம் பிரதிவாதியின் வயது சுமார் 66 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் 2018ம் ஆண்டு தாக்கல் செய்த முதல்விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் தனது வயது 74 என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் தற்போது மனுதாரருக்கு சுமார் 80 வயது இருக்கும் என்பது தெரிய வருகிறது. எனவே வயது முதிர்வின் காரணமாக மனுதாரருக்கு தலைசுற்றல் மற்றும் நோய் காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் மனுதாரர் 9, 26, 18, 12, 13, 33, 34 முதல் 37 மற்றும் வாதிகள் தரப்பில் இன்னும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

9. எனவே 9 மற்றும் 26 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் நீதிமன்ற நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவர் என்றும் அதனால் நீதிமன்ற ஆணையர் மூலம் குறுக்கு விசாரணை செய்ய சரியான ஒத்துழைப்புக் கொடுக்கமாட்டார் என்றும் அதனால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது 2011ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருவதாலும் 03.12.2018 முதல் பி.வா.சா.3ன் குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கானது நிலுவையில் இருந்து வருவதாலும் மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் அசல் வழக்கில் மேற்கொண்டு ஏற்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காகவும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் இம்மனுவில் பி.வா.சா.3ன் குறுக்கு விசாரணை பதிவு செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதே

நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு, இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.E.S.ரஞ்சித், M.S.No.583/2006 அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 4 (4)ன்படி 9, 26, 18, 12, 13, 33, 34 முதல் 37 மற்றும் வாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ன் குறுக்கு விசாரணை மற்றும் சாட்சியத்தை உபயதரப்பினர்கள் முன்னிலையில் பதிவு செய்து அது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் பி.வா.சா.3 ன் சாட்சியத்தை பதிவு செய்வதற்கு முன்னர் இரு தரப்பினர்களுக்கும் உரிய அறிவிப்புகள் கொடுக்க வேண்டும் என்றும் நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய மறு வாய்தா 18.08.2025

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.08.04 19:19:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.08.04 19:19:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.